AL/2016/23/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் (×) இடுவதன் மூலம் காட்டுக.

※ ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

● **1** முதல் **15** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **ஒரு** கூற்று பிழையானதாகும். **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கறகைகளாவன:
(1) வரையறைகளுக்குட்பட்ட சமூக அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதம்
(2) சமூக அதிகாரத்தின் இயல்பும் அதன் மீதான வரையறைகளின் மூலங்களும்
(3) சமூக அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் நுட்பமுறைகளும் வழிமுறைகளும்
(4) சமூக அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதோடு தொடர்புபடும் செயற்பாட்டாளர்களும் அதிகாரத் தாபனங்களும்
(5) சமூக அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டாளர்களின் தனிப்பட்ட நடத்தை

**2.** அரசியல் என்பது:
(1) அரசியல் அதிகாரத்தோடும் அதன் பிரயோகத்தோடும் தொடர்பான மோதல் அல்லது போட்டியாகும்.
(2) யார், எதனை, எப்போது, எவ்வாறு பெற்றுக்கொள்வர் என்பதைத் தீர்மானிக்கும் கருவியாகும்.
(3) பொது விவகாரங்கள் தொடர்பாக மேலெழும் முரண்பாடான கருத்துகளினதும் அபிப்பிராயங்களினதும் இறுதி விளைவாகும்.
(4) மனிதர் தமது பாவகரமான வாழ்க்கையிலிருந்து மீள்வதற்கான வழிமுறையாகும்.
(5) துப்பாக்கி ரவையினால் அல்லது வாக்கினால் மேற்கொள்ளும் அதிகாரப் போராட்டமாகும்.

**3.** அரசியல் விஞ்ஞானம் ஒரு விஞ்ஞானத்தை விடவும் ஒரு கலையாகக் கருதப்படக் காரணம்:
(1) சுமார் 2 500 வருடங்கள் நீண்ட வரலாற்றையுடையதாக இருத்தலாகும்.
(2) ஆய்வுகளை மேற்கொள்வதில் விஞ்ஞான ஆய்வுகூட நுட்பங்களைப் பயன்படுத்த முடியாமையினாலாகும்.
(3) பாடத்தைக் கற்பதற்குச் சீரான செயன்முறைகளும் மூலக்கொள்கைகளும் இல்லாமையினாலாகும்.
(4) நிச்சயமான இறுதி முடிவுகளுக்கு வரக்கூடிய சரியான பௌதீகத் தளம் இல்லாமையினாலாகும்.
(5) காரண, காரியங்களுக்கிடையில் நிச்சயமான தொடர்பு இல்லாமையினாலாகும்.

**4.** அரசு என்பது:
(1) விசேட அரசியல் கட்டமைவுகளைக் கொண்ட ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும்.
(2) சகல சமூக விஞ்ஞானங்களினதும் மையக் கருவாகும்.
(3) பொது நலன்களின் நாமத்தால் ஏனைய சகல சமூகத் தாபனங்களுக்கும் மேலாலுள்ள உயர் அரசியல் தாபனமாகும்.
(4) சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளராகும்.
(5) தோற்றத்திலும் இயல்பிலும் வேறுபட்டதென வேறுபட்ட சிந்தனாவாதக் குழுவினர்களால் நோக்கப்படுகின்றது.

**5.** இறைமை அதிகாரம் என்பது:
(1) அரசுக்கு மட்டும் உரித்தான உயர் அதிகாரமாகும்.
(2) தன்னிகரற்றதும் வரையறையற்றதுமான அதிகாரமாகக் கருதப்படுகிறது.
(3) மனிதச் சமூகமானது அரசு எனக் கருதப்படுவதற்கு அத்தியாவசியமாகும் மூலக்கூறாகும்.
(4) 1648 வெஸ்ட்பாலியா சமாதான உடன்படிக்கையின் மூலம் அரசுகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரமாகும்.
(5) அரசாக இருப்பதனால் அரசுக்கே உரித்தாகும் தனித்துவமான அதிகாரமாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**6.** அரசாங்கம் என்பது:
(1) அரசின் பொது நலன்களைச் செயற்பாடாக மாற்றும் அரசின் கரமாகும்.
(2) சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதாகும்.
(3) அரசின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மக்கள் கூட்டமாகும்.
(4) அதன் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளது எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
(5) மாற்ற முடியாத நிலையானதொன்றாகும்.

**7.** சட்டத்துறை என்பது:
(1) ஜனநாயக ஆட்சியின் அத்தியாவசிய அங்கமாகும்.
(2) ஒற்றை மன்று அல்லது இரு மன்ற முறையினடிப்படையில் அமைந்திருக்கும்.
(3) அரசாங்கத்துக்குச் சட்டமுறைத் தன்மையை வழங்கும் பிரதான அரசாங்கத் தாபனமாகும்.
(4) அரசியல் கட்சிகளினால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களையே கொண்டிருக்கும்.
(5) அந்தஸ்து மற்றும் வரப்பிரசாதங்களில் சமமான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

**8.** நிறைவேற்றுத்துறை என்பது:
(1) அரசாங்கப் பொறிமுறையை இயக்கும் பிரதான செலுத்துனராகும்.
(2) அரசின் தலைவரையும் அமைச்சர்களையும் கொண்டதாகும்.
(3) எவ் அரசியல் முறைமையிலுமுள்ள அரசியல் கோபுரத்தின் உயர் பதவியாகும்.
(4) ஜனநாயக முறையில் ஜனாதிபதி, அரைகுறை ஜனாதிபதி, மந்திரி சபை என்றவாறு ஒழுங்கமைந்திருக்கும்.
(5) அரசின் உயர் சட்டங்களை ஆக்கும் அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அங்கமாகும்.

**9.** நீதித்துறை என்பது:
(1) அரசின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் பயன்படுத்தும் கருவியாகும்.
(2) ஓர் அரசியல் முறைமையிலுள்ள நீதிமன்றங்களின் தொகுதியாகும்.
(3) அரசின் சட்டங்களை விவரணம் செய்யும் தாபனமாகும்.
(4) பொதுவாக மேனிலை, கீழ்நிலை நீதிமன்றங்கள் என இரு மட்டங்களில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.
(5) தனிநபர் உரிமைகளின் பாதுகாவலர், காப்பாளர் எனக் கருதப்படுகிறது.

**10.** சட்டம் என்பது:
(1) அரசு தனது உறுப்பினர்களின் நடத்தை தொடர்பாக முன்வைக்கும் பொது விதிகளாகும்.
(2) சில வழிமுறைகளின்படி நிதமும் எழுதப்பட்டும் பதியப்பட்டுமிருக்கும்.
(3) சிவில் சமூகத்தின் விருப்புடனும் அனுமதியுடனும் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும்.
(4) பிரத்தியேகச் சந்தர்ப்பங்களைத் தவிர சகலருக்கும் சமமானதாகப் பிரயோகிக்கப்படும்.
(5) மீறப்படின் தண்டனைக்குள்ளாக நேரிடும்.

**11.** வலு வேறாக்கக் கோட்பாடு வலியுறுத்துவது:
(1) அரசாங்கத்தின் பணிகள் சட்டவாக்கம், நிறைவேற்றம், நீதி என மூவகைப்படுகிறது என்பதையாகும்.
(2) அரசாங்கத்தின் பணிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட ஆட்களைக் கொண்ட தாபனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையாகும்.
(3) ஒவ்வொரு துறையும் அதன் செயற்பாட்டுப் பரப்போடு சுருங்கியதாக இருக்க வேண்டும் என்பதையாகும்.
(4) மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு வலு வேறாக்கம் அவசியமாகிறது என்பதையாகும்.
(5) வலு வேறாக்கமும் மக்கள் சுதந்திரமும் கைகோர்த்துச் செல்வதில்லை என்பதையாகும்.

**12.** மனித உரிமைகளாவன:
(1) மனிதனாக இருப்பதனால் மனிதர்களுக்கு உரித்தாகும் உரிமைகளாகும்.
(2) அகிலத் தன்மையானவையும் அடிப்படையானவையும் தனிமுதன்மையானவையுமாகும்.
(3) பொருளுடையாவதற்கு மதிக்கப்படுதல் வேண்டும்.
(4) அரசின் பிரசைகளால் மட்டும் அனுபவிக்கப்படுவனவாகும்.
(5) வறுமை, கையறு நிலை என்ற சூழ்நிலைகளில் பொருளற்றவையாகிவிடும்.

**13.** பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது:
(1) சாதாரண மக்களை அரசியலிலிருந்து தூரப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் உறுதித்தன்மையைப் பேணுவதற்கு உதவிபுரியும்.
(2) ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரயோக வடிவத்தைத் தருகிறது.
(3) ஆட்சி பற்றிய தீர்மானம் எடுக்கும் பொறுப்பிலிருந்து சாதாரண பிரசைகளை விடுவிக்கின்றது.
(4) நிபுணத்துவ அறிவையுடைய ஆட்களின் கையில் ஆட்சியை ஒப்படைக்க வாய்ப்பளிக்கிறது.
(5) ஆள்வோர் - ஆளப்படுவோர் சேய்மையை இல்லாதொழிக்கின்றது.

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**14.** சமஷ்டி அரசாங்கம் என்பது:
(1) பிறிதொரு அதிகார வேறாக்க மாதிரியாகும்.
(2) ஒற்றுமையினதும் வேற்றுமையினதும் நன்மைகளை ஒன்றிணைப்பதாகும்.
(3) அதிகம் மத்தியமயப்படுத்தப்பட்ட மத்திய அரசாங்கம் உருவாகுவதற்கு வழிசமைக்கும்.
(4) பிரதேச மட்டத்தில் செறிந்துள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க உதவும்.
(5) பரப்பளவில் பெரிய அரசுகளுக்குச் சாலவும் பொருந்தும்.

**15.** ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது:
(1) அதிகாரமற்ற ஒரு மத்திய அரசாங்கம் உருவாகுவதற்கு வழிசமைக்கின்றது.
(2) சிறிய அரசுகளுக்கு அல்லது ஒருமைத் தன்மையிலான பிரதேசங்களைக் கொண்ட அரசுகளுக்குச் சாலவும் பொருந்தும்.
(3) முழு நாட்டிலும் ஒருமைத் தன்மையான சட்ட மற்றும் நிர்வாக முறைமையைப் பேணுவதற்கு உதவும்.
(4) அரசாங்கத்தின் வேலைகள் இரு முறை மேற்கொள்ளப்படுவதால் ஏற்படும் வீண் விரயத்தைத் தடுக்க உதவும்.
(5) அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலையும் பொறுப்பாதலையும் தெளிவாக இனங்காண உதவும்.

● **16** முதல் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**16.** மந்திரி சபை அரசாங்க முறை என்பது:
A – நாம மற்றும் உண்மை என்ற இரு நிறைவேற்றுப் பகுதிகளைக் கொண்டதாகும்.
B – கூட்டுப் பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்ற இரு மூலக்கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும்.
C – வெற்றிகரமான செயற்பாட்டுக்கு அரசியல் ஒருமைத் தன்மையை வேண்டுகிறது.
D – அரசாங்கத்தினுள் மந்திரி சபையின் சர்வாதிகாரம் தோன்றும் போக்கினைக் காட்டி நிற்கின்றது.
E – சிறப்பாக ஒழுங்கமைந்த இரு கட்சி முறையின் கீழ் வெற்றிகரமாகச் செயற்படும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**17.** ஜனாதிபதி அரசாங்க முறை என்பது:
A – மந்திரி சபை முறையை விட அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை உத்தரவாதப்படுத்தும்.
B – அரசியல் கட்சிகளின் செல்வாக்குச் செலுத்தலைக் குறைக்கும்.
C – சமூகப் பலதன்மையுடைய நாடுகளுக்குச் சாலவும் பொருந்தும்.
D – ஜனநாயக ஆட்சியை ஓரளவு பலவீனப்படுத்தும்.
E – வலு வேறாக்கத்தின் அடிப்படையில் செயற்படும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**18.** ஐக்கிய அமெரிக்க சமஷ்டி அரசாங்கமானது:
A – ஒரு மத்திய அரசாங்கத்தையும் ஐம்பது மாகாண அரசாங்கங்களையும் கொண்டுள்ளது.
B – வலு வேறாக்கம், தடைகள் சமன்பாடுகள் என்ற மூலக்கொள்கைகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளது.
C – மாகாண அரசுகள் தமது சுய விருப்பின்படி வெளியேறும் உரிமையைக் கொண்ட ஒன்றிய அரசுகளைக் கொண்டது.
D – பலவீனமான மத்திய அரசாங்கத்தையும் பலமான மாகாண அரசாங்கங்களையும் பண்பாகக் கொண்டுள்ளது.
E – பழம் சமஷ்டிவாதத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**19.** பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்துறையானது:
A – பாராளுமன்றம் என்றழைக்கப்படுகிறது.
B – இரு மன்றுகளைக் கொண்டது.
C – பாராளுமன்றின் இறைமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படுகிறது.
D – தனது சட்டவாக்கப் பணிகள் தொடர்பாக மகா இராணியாருக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.
E – அரசியல் முறைமையில் சட்டவாக்கம் செய்யும் உயர்தன்மை பொருந்திய தாபனமாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**20.** 1958 டிகோல் யாப்பின் கீழ் பிரான்சில் தாபிக்கப்பட்ட அரசாங்கமானது:
A – நான்காம் குடியரசு எனவும் அழைக்கப்படுகிறது.
B – ஜனாதிபதி மற்றும் மந்திரி சபை முறைகளின் மூலக்கொள்கைகளைக் கொண்ட கலப்பு அரசாங்க முறையினதாகும்.
C – பலமான நிறைவேற்றுத்துறை, பலவீனமான சட்டத்துறை என்ற அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளது.
D – ஐந்து வருடப் பதவிக்காலத்துக்கு மக்களால் தெரிவுசெய்யப்படும் ஒரு ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படுகிறது.
E – 1 789 இற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட மிகவும் வெற்றிகரமான அரசாங்கமுறை எனக் கருதப்படுகிறது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


**21.** இந்திய சமஷ்டி அரசாங்க முறை என்பது:
- A – 1950 இல் உருவாக்கப்பட்ட சமஷ்டி யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டது.
- B – மருவிய சமஷ்டி எனக் கருதப்படுகிறது.
- C – இரட்டைக் குடியுரிமையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளது.
- D – ஒரு மத்திய அரசாங்கத்தையும் இருபத்தொன்பது மாநில அரசாங்கங்களையும் கொண்டுள்ளது.
- E – பலமான மத்திய அரசாங்கமும் பலவீனமான மாநில அரசாங்கங்களும் என்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**22.** சுவிட்சர்லாந்து சமஷ்டி அரசாங்க முறையிலுள்ள சமஷ்டி மன்றமானது:
- A – ஒத்த அதிகாரங்களையுடைய இரு மன்றுகளைக் கொண்டதாகும்.
- B – இரு மன்றுகளும் ஒன்றாகக் கூடும்போது ஐக்கிய சமஷ்டி மன்றம் என்றழைக்கப்படுகிறது.
- C – சமஷ்டி அரசாங்க முறையிலுள்ள உயர் சட்டவாக்குனராகும்.
- D – சமஷ்டிப் பேரவை, சான்சலர், சமஷ்டி நீதியரசர்கள் என்போரை நியமிக்கும் பொறுப்பை வகிக்கின்றது.
- E – கன்ரன்களினால் மறைமுகமாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**23.** சர்வதேச அரசியல் என்பது:
- A – சர்வதேச சமூகத்தில் அரசுகளால் மேற்கொள்ளப்படும் அதிகாரப் போராட்டமாகும்.
- B – அரசுகளின் தேசிய நலன்களை விருத்திசெய்வதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- C – வாக்குகளினால் அன்றி துப்பாக்கி ரவைகளினால் மேற்கொள்ளப்படும் போராட்டமாகும்.
- D – வல்லரசுகளுக்கிடையில் நிலவும் அதிகாரப் போராட்டமாகும்.
- E – 'அரசாங்கமற்ற அரசியல்' என்றும் அழைக்கப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**24.** பொதுக் கொள்கைகள் என்பது:
- A – விசேட இலக்குகளை அடைவதற்காக அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளாகும்.
- B – அரசாங்கம் மேற்கொள்வதற்கோ மேற்கொள்ளாமலிருப்பதற்கோ விரும்பும் கொள்கைகளாகும்.
- C – தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கைகளாகும்.
- D – மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதனை அல்லது குறைப்பதை இலக்காகக் கொண்ட கொள்கைகளாகும்.
- E – மக்கள் கோரிக்கைகளுக்குத் துலங்குவதற்கு அரசு திட்டமிடும் கொள்கைகளாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**25.** சமூக மோதல்கள் ஏற்படுவதில் பாதிப்புச் செலுத்தும் காரணிகளாவன:
- A – சமூகத்தில் சமூக வர்க்கங்களுக்கிடையில் அதிகாரங்களும் வளங்களும் சமமற்ற வகையில் பங்கீடு செய்யப்படுகின்றமை
- B – மனிதர்களின் சமூக நடத்தையைப் பாதிக்கும் சமூக ஒழுக்கங்கள் தொடர்பான உடன்பாடின்மை
- C – தமது நலன்களை விருத்திசெய்வதில் சமூக வர்க்கங்களுக்கிடையில் நிலவும் போராட்டம்
- D – சமூக அதிகாரத்தையும் வளங்களையும் கட்டுப்படுத்துவதில் சமூக வர்க்கங்களுக்கிடையில் நிலவும் போட்டி
- E – தமது கருத்தினை எதிர்க் குழுவின் மீது திணிப்பதற்குச் சமூகக் குழுக்கள் திட்டமிட்டுச் செய்யும் முயற்சிகள்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**26.** 1 833 கோல்புருக் - கமரன் சீர்திருத்தங்களின் பிரதான நோக்கங்களாவன:
- A – ஜனநாயக ஆட்சியின் விருத்திக்கான கதவு திறந்துவிடப்படல்
- B – நாட்டின் பொருளாதாரத்தை மானிய முறையிலிருந்து முதலாளித்துவ முறைக்கு மாற்றுவதற்குத் தேவையான கீழ்க் கட்டமைப்பினை ஏற்படுத்துதல்
- C – புத்த சமயத்தை அரச மதமாகப் பாதுகாத்து மேம்படுத்துதல்
- D – நாட்டை ஓர் ஐக்கிய அரசின் கீழ் கொண்டு வருதல்
- E – சிவில் சேவையில் நுழைவதற்கு இலங்கையர்களுக்கு வாய்ப்பளித்து அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**27.** 1 833 கோல்புருக் - கமரன் சீர்திருத்தங்களின் சில பாதகமான விளைவுகளாவன:
- A – இலங்கை ஓர் ஐக்கிய அரசாகத் தோற்றம் பெற்றமை
- B – இனவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமையால் இனங்களுக்கிடையில் இனவாதம் வளர்ச்சியடைந்தமை
- C – தன்னிறைவு மிக்க கிராமியப் பொருளாதாரம் அழிவுற்றமை
- D – வர்த்தகப் பயிர்ச்செய்கை அறிமுகம் செய்யப்பட்டமையால் மத்திய மலைநாட்டில் காணிப் பிரச்சினை உருவாகியமை
- E – வர்த்தகப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான உழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இந்திய ஊழியர்களை இறக்குமதி செய்தமையால் இந்தியத் தமிழர் பிரச்சினை உருவாகியமை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk


**28.** 1911 – 1924 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்களால் இலங்கையின் ஆட்சியில் ஏற்பட்ட முக்கியமான சில மாற்றங்களாவன:

A – தேசாதிபதியின் நிலை நாம நிறைவேற்றாளர் மட்டத்துக்கு இறக்கப்பட்டமை
B – நிதிக் குழு தாபிக்கப்பட்டமை
C – அதிகரிக்கப்பட்ட அதிகாரத்தோடு சட்டமன்றின் உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை
D – வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை
E – தேர்தல் அரசியலின் மூலம் ஆட்சியில் மக்களின் பங்கேற்பு ஆரம்பமாகியமை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**29.** பிரித்தானிய ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட முக்கியமான சில அரசியல், பொருளாதார, சமூக விருத்திகளாவன:

A – சுதேச முதலாளித்துவ வர்க்கம் தோன்றியமை
B – இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சி
C – அரசியலில் கல்வி கற்ற மத்தியதர வர்க்கத்தின் செல்வாக்கு அதிகரித்தமை
D – நிலமானியப் பிரபுக்களின் அதிகாரங்களும் அந்தஸ்தும் படிப்படியாக வீழ்ச்சியுற்றமை
E – குடியேற்ற நாட்டரசாங்கத்தின் உதவியுடன் பிரிவெனாக் கல்வி மலர்ச்சியுற்றமை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**30.** இலங்கைத் தேசிய இயக்கமானது:

A – பரந்த மக்கள் இயக்கமாகவிருந்தது.
B – அரசியல் யாப்புச் சீர்திருத்த இயக்கமாக இருந்தது.
C – இந்தியத் தேசிய இயக்கத்தைப் போன்று பலமானதாக இருக்கவில்லை.
D – மேற்கத்தியமயமான சமூக உயர் குழாமினரால் தலைமைதாங்கப்பட்ட இயக்கமாக இருந்தது.
E – இலங்கையர்களுக்கு அதிகம் பொறுப்பு மிக்க ஓர் அரசாங்க முறையைப் பெற்றுக்கொள்வதற்காகச் செயற்பட்ட ஓர் இயக்கமாகவிருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**31.** 1931 டொனமூர் அரசியல் யாப்பு:

A – நிறைவேற்றுப் பணிகளைப் புரிவதற்குத் தேசாதிபதி, அமைச்சரவை, நிறைவேற்றுக் குழு என்பவற்றைக் கொண்ட ஒரு பொறிமுறையை அறிமுகம் செய்தது.
B – தேசாதிபதியின் நிலையை நாம நிறைவேற்றாளர் நிலைக்கு இறக்கியது.
C – வருடாந்த பாதீடு தொடர்பாக அமைச்சரவையை அரசாங்க சபைக்குப் பொறுப்புக்கூறலுக்குட்படுத்தியது.
D – சில நிபந்தனைகளின் கீழ் 21 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமையை வழங்கியது.
E – சட்டவாக்க, நிறைவேற்றுப் பணிகள் இரண்டும் ஒப்படைக்கப்பட்ட அரசாங்க சபை என்றழைக்கப்பட்ட ஒரு பிரதிநிதிகள் மன்றைத் தாபித்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**32.** 1931 டொனமூர் அரசாங்கத்திலிருந்த மூன்று அரச அதிகாரிகள்:

A – உத்தியோகரீதியாக அரசாங்க சபையிலும் அமைச்சரவையிலும் உறுப்புரிமை பெற்ற குடியேற்ற நாட்டாட்சியின் பிரதிநிதிகளாக இருந்தனர்.
B – அரசாங்க சபைக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூறுவதற்கு உட்படுத்தப்பட்டனர்.
C – இலங்கை அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்குவோராகச் செயற்படுவர் என எதிர்பார்க்கப்பட்டனர்.
D – தேசாதிபதியுடன் இணைந்து புறம்பான ஒரு நிறைவேற்று மன்றமாகச் செயற்பட்டதைக் காண முடிந்தது.
E – யாப்பின் 'காவல் நாய்கள்' என அறியப்பட்டனர்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**33.** 1948 சோல்பரி அரசியல் யாப்பு:

A – பிரித்தானிய ஆட்சியாளர்கள் சுதந்திரத்தோடு வழங்கிய சுதந்திர இலங்கையின் முதலாவது யாப்பாகும்.
B – சமமான அதிகாரங்களைக் கொண்ட இரு மன்ற சட்டமன்றைக் கொண்டதாகும்.
C – 1944 அமைச்சரவை நகல் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.
D – சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் விசேட கவனத்தைச் செலுத்தியது.
E – 1972 முதலாம் குடியரசு யாப்பின் உருவாக்கத்தோடு இல்லாதொழிக்கப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**34.** 1 948 சோல்பரி அரசியல் யாப்பு:

A – பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க மாதிரியை ஒத்ததோர் அரசாங்க முறையை வழங்கியது.

B – உண்மை நிறைவேற்றுப் பகுதி என்றழைக்கப்பட்ட மந்திரி சபைக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கியது.

C – வரையறுக்கப்பட்ட சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்ற பாராளுமன்றம் என்றழைக்கப்பட்ட ஒரு சட்டமன்றை நிறுவியது.

D – சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விஷேட காப்பீடுகளை வழங்கியது.

E – பிரதமரால் நியமிக்கப்பட்ட ஒரு நாம நிறைவேற்றாளர் பதவியை அறிமுகம் செய்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**35.** 1 972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு:

A – பெரிய பிரித்தானியாவுடனிருந்த சகல யாப்புத் தொடர்புகளையும் கையுதிர்க்கும் திருப்பத்தினைக் குறித்து நிற்கின்றது.

B – இலங்கையின் உத்தியோகரீதியான பெயரை 'ஸ்ரீ லங்கா' என்று மாற்றியது.

C – சோல்பரி யாப்பின் கீழ் செயற்பட்ட மந்திரி சபை முறையைத் தொடர்ந்து கொண்டு நடத்தியது.

D – நாட்டில் வாழ்ந்த சகல இந்தியத் தமிழர்களுக்கும் குடியுரிமையை வழங்கியது.

E – நீதித்துறையையும் சிவில் சேவையையும் அரசியல் நிறைவேற்றுத்துறையின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தியது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **36** முதல் **40** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் பிழையானவையாகும். **பிழையான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**36.** 1 972 அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவை:

A – சோல்பரி யாப்பின் கீழிருந்த சட்டத்துறையை ஒத்ததாகவிருந்தது.

B – தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

C – பாராளுமன்றின் இறைமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட தாபனமாக இருந்தது.

D – குறைந்தபட்சம் மாதத்துக்கு ஒரு முறையாவது கூட வேண்டும்.

E – சனாதிபதி என்றழைக்கப்பட்ட நாம நிறைவேற்றாளரினால் தலைமை தாங்கப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**37.** 1 978 இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க முறை:

A – சனாதிபதி முறைக்குள் மறைந்த மன்னராட்சி முறையினதாக இருக்கின்றது.

B – சனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட சனாதிபதிப் பதவியால் போர்த்தப்பட்ட ஒரு சர்வாதிகார முறையாகும்.

C – பிரான்சிய சனாதிபதி முறையை ஒத்த கலப்பு நிறைவேற்று முறையாகும்.

D – அமெரிக்க சனாதிபதி முறையை ஒத்த சனாதிபதி முறையாகும்.

E – சனாதிபதியினால் தலைமை தாங்கப்படும் பாராளுமன்ற முறையாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**38.** 1 978 மூல யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றம்:

A – பாராளுமன்றின் இறைமை என்ற மூலக்கொள்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளது.

B – மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களை மட்டும் கொண்டுள்ளது.

C – ஐந்து வருட பதவிக்காலத்துக்குத் தெரிவு செய்யப்படும் தனி மன்றச் சட்டத்துறையாகும்.

D – பிரதம மந்திரியின் மதியுரையின் மீது சனாதிபதியால் கலைக்கப்படும்.

E – சட்டவாக்கம் தொடர்பாக பூரண சட்டவாக்க அதிகாரத்தைக் கொண்டதன்று.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**39.** 1 978 யாப்பின் மீதான 19ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புப் பேரவையின் பணிகளாவன:

A – உயர் பகிரங்க அதிகாரிகளை நியமிப்பதில் சனாதிபதிக்கும் மந்திரி சபைக்கும் உதவிபுரிதல்

B – நல்லாட்சி தொடர்பான விவகாரங்களைக் கையாளுவதில் சனாதிபதிக்கு உதவுதல்

C – சில அரச ஆணைக்குழுக்களுக்கு ஆட்களை நியமிப்பதில் சனாதிபதிக்குச் சிபார்சு செய்தல்

D – பகிரங்க ஊழியர்களின் இலஞ்ச, ஊழல்கள் தொடர்பாகச் செயற்படுவதில் சனாதிபதிக்கு உதவுதல்

E – அமைச்சுக்களின் செயலாளர்களை நியமிப்பதில் சனாதிபதிக்கு உதவுதல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


**40.** 1 978 அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்:
A – அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்திலுள்ள உரிமைகளை எவ்வகையிலும் ஒத்தவையன்று.
B – பிரசைகளால் மட்டுமே அனுபவிக்கப்படலாம்.
C – நிறைவேற்றுச் செயற்பாடுகளால் மீறப்பட்டால் மட்டுமே நீதித் தீர்ப்பை நாடலாம்.
D – அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் இறைமையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும்.
E – அரசுக்கும் நீதித்துறைக்குமிடையில் மோதல் ஏற்படுவதில் தாக்கம் புரியும் பிரதான மூலாதாரமாகக் கருதப்படுகிறது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **41** முதல் **50** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் மாத்திரம் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**41.** 1 978 அரசியல் யாப்புக்கான 19ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ்:
A – சனாதிபதியின் பதவிக்காலம் 6 வருடங்களிலிருந்து 5 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
B – சனாதிபதி வேட்பாளர்களின் குறைந்தபட்ச வயதெல்லை 30 இலிருந்து 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
C – ஓர் ஆள் இரு தவணைகளுக்கே சனாதிபதிப் பதவிக்குத் தெரிவுசெய்யப்படலாம் என்ற வரையறை மீள விதிக்கப்பட்டுள்ளது.
D – பாராளுமன்றம் நிராகரிக்கும் சட்ட மூலங்களை மக்கள் தீர்ப்புக்கு விடுவதற்கு சனாதிபதிக்குள்ள அதிகாரம் மாற்றப்படவில்லை.
E – யாப்பினை மதித்து அதனைப் பின்பற்றுவதாக உறுதியளித்தல் ஜனாதிபதியின் பொறுப்பாக ஆக்கப்பட்டுள்ளது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**42.** இலங்கையின் அரசியல் கட்சி முறையின் பிரதான பண்புகளாவன:
A – பிரதான இரு அரசியல் கட்சிகளையும் அதிகளவிலான சிறிய கட்சிகளையும் கொண்ட பல கட்சி முறை
B – இரு பிரதான அரசியல் கட்சிகள் கட்சி முறைமையில் ஆதிக்கம் செலுத்துதல்
C – சிறிய அரசியல் கட்சிகள் பிரதான இரு அரசியல் கட்சிகளையும் சூழ்ந்தமைந்துள்ள இரு கூட்டுக் கட்சி முறை
D – இனத்துவ அடிப்படையிலான அரசியல் கட்சிகள் உருவாகும் போக்கு காணப்படுதல்
E – அரசியல் கட்சி முறைமையில் பழைய இடதுசாரிக் கட்சிகள் மூன்றாம் சக்தியாக மீளெழுதல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**43.** 1 978 அரசியல் யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட விகிதசமப் பிரதிநிதித்துவ முறை:
A – பல அங்கத்தவர் மாவட்டத் தொகுதிகளின் அடிப்படையில் செயற்படுகின்றது.
B – தேர்தலின்போது மூன்று விருப்பு வாக்குகளைத் தெரிவிக்கும் வாய்ப்பை ஒவ்வொரு வாக்காளருக்கும் பெற்றுக் கொடுத்துள்ளது.
C – இரு கட்சி முறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது.
D – கட்சித் தலைமைத்துவத்தின் சில்லோராட்சியதிகாரம் பலம் பெறுவதற்குப் பங்காற்றுகிறது.
E – எந்தக் கட்சியும் பாராளுமன்றில் 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதை எளிதாக்குவதில்லை.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**44.** இலங்கையின் மாகாண சபைகள்:
A – நாட்டின் அடிப்படைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளன.
B – நாட்டின் இனப் பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாக அறிமுகம் செய்யப்பட்டன.
C – நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.
D – ஒரு மாவட்டத்துக்கு ஒன்று என்ற வகையில் தாபிக்கப்பட்டுள்ளன.
E – 1 978 யாப்புக்கான 13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளன.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**45.** ஐக்கிய நாடுகள் தாபனம்:
A – தற்கால உலக முறைமையில் செயற்படும் மிகப் பெரிய அரச சார்பு நிறுவனமாகும்.
B – ஐந்து வல்லரசுகளைக் கொண்ட ஒரு குழுவினால் ஆளப்படுகிறது.
C – ஆறு பிரதான உறுப்பமயங்களைக் கொண்டமைந்துள்ளது.
D – உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணும் பொறுப்பினைப் பெற்ற பிரதான சர்வதேச அரச சார்புத் தாபனமாகும்.
E – உறுப்பரசுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற மூலக்கொள்கையின் அடிப்படையில் செயற்படுகிறது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**46.** ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமைகள் பேரவை:

A – 2006 இல் பொதுச் சபையினால் உருவாக்கப்பட்டது.
B – பொதுச் சபையினால் தெரிவுசெய்யப்படும் 47 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.
C – சகல வகையான மனித உரிமைகளையும் விருத்திசெய்து பாதுகாக்கும் பொறுப்பினைப் பெற்றுள்ளது.
D – தொனிப்பொருள் சார்ந்த மனித உரிமைகள் விவகாரங்களை வருடம் பூராவும் கலந்துரையாடும் அதிகாரம் பெற்றுள்ளது.
E – தனது செயற்பாடுகள் தொடர்பாகச் செயலாளர் நாயகத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**47.** பிராந்திய ஒத்துழைக்புக்கான தென்னாசியச் சங்கம்:

A – ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும்.
B – எட்டு தென்னாசிய நாடுகளைக் கொண்டதாகும்.
C – பொருளாதார, சமூகப் பரப்புகளில் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
D – 1985 டாக்கா பிரகடனத்தின் மூலக்கொள்கைகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.
E – சர்வதேச சமூகத்தில் 'வறியோரின் கழகம்' எனப் பொதுவாக அறியப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**48.** பொது நலவாய அமைப்பு:

A – யாப்பொன்றின் அடிப்படையில் தாபிக்கப்படாத ஒரே அரச சார்பு நிறுவனமாகும்.
B – தற்போது 53 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
C – செயலாளர் நாயகத்தின் தலைமையில் செயற்படுகிறது.
D – உறுப்பரசுகளின் அரசாங்கங்களுக்கிடையிலான உடன்பாட்டின் அடிப்படையில் செயற்படுகிறது.
E – இறைமை மிக்க அரசுகளை மட்டும் கொண்டிருப்பதோடு அவற்றுள் பெரும்பாலானவை முன்னைய பிரித்தானிய காலனித்துவ நாடுகளாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**49.** சர்வதேச மன்னிப்புச் சபை:

A – 1961 இல் தாபிக்கப்பட்ட ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும்.
B – 'சகலரும் மனித உரிமைகளை அனுபவிக்க வேண்டும்' என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் பிரசாரம் செய்யும் ஓர் இயக்கமாகும்.
C – போர்க் கைதிகளின் நலன்களில் கவனம் செலுத்தும் ஓர் அரச சார்பு நிறுவனமாகும்.
D – பொதுவாக சர்வதேச சமூகத்தில் 'அம்னஸ்டி' அல்லது 'AI' எனப் பிரபல்யமடைந்துள்ளது.
E – மனித உரிமைகளோடு தொடர்பான சட்டமுறைப் பரிந்துரை, ஊடகக் கவனயீர்ப்புகள், பிரசாரங்கள், ஆய்வுகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**50.** சர்வதேச செஞ்சிலுவைக் குழு:

A – சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரை மையமாகக் கொண்டு செயற்படும் ஒரு மனிதாபிமான நிறுவனமாகும்.
B – சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினை மேம்படுத்துவதில் ஈடுபடும் பிரதான சர்வதேச நிறுவனமாகும்.
C – மனிதத்துவம், பக்கச்சார்பின்மை, சுதந்திரம், தன்னார்வம், அகிலத்தன்மை என்ற மூலக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது.
D – பிரதானமாக ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதில் கவனம் செலுத்துகிறது.
E – ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஓர் இணை நிறுவனமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

AL/2016/23/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

19732

| பகுதி A | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

சுட்டெண்: ..................................

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாப்பத்திரம் **A, B, C** என்ற **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **A** ஆனது **20** குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். **சகல** வினாக்களுக்குமான குறு விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனைப் பகுதி **B, C** ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **B** யிலிருந்தும் **C** யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளும் இரு அரசியல் முறைமைகளில் அரசுக்கும் பிரசைகளுக்குமுள்ள தொடர்புகள் ஆளப்படும் விதத்தைக் குறிப்பிடுகின்றன. அவ் **இரு** அரசியல் முறைமைகளையும் இனங்கண்டு முறையே பெயரிடுக.

(i) "இந்த அரசியல் முறைமையில் அரசாங்கப் பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்குப் போட்டி நிலவுகிறது. தெரிவானது அதிகாரப் பிரயோகமின்றி, எச்சமூகக் குழுவினரையும் தவிர்த்துவிடாது நியாயமான, காலாகாலத் தேர்தல்கள் மூலம் நடைபெறும். தமது தலைவர்களைத் தெரிவுசெய்வதிலும் பொதுக் கொள்கை உருவாக்கத்திலும் குடிகள் பங்கேற்க முடியும். அரசியல் முறைமையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சிவில், அரசியல் சுதந்திரங்களின் கீழ் போட்டியினதும் பங்கேற்பினதும் நேர்மைத் தன்மை பாதுகாக்கப்படும்."

(ii) "இவ்வரசியல் முறைமையில் குடிகளின் வாழ்க்கை தனிப்பட்டதாயினும் பொதுவானதாயினும் அதன் சகல அம்சங்களையும் கட்டுப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் அரசு தலையிடும். இதன் பொருள் அரசினால் தீர்மானிக்கப்படும் சில நோக்கங்களைப் பூர்த்தி செய்வதனை இலக்காகக் கொண்டு மக்களின் அரசியல், பொருளாதார, சமூக-கலாசார, புலமைசார் வாழ்க்கை அரசினால் நெறிப்படுத்தப்படும் என்பதாகும். அரசை எதிர்ப்பதற்கோ, விமர்சிக்கவோ, புதிய நோக்கமொன்றை முன்வைக்கவோ குடிகளுக்கு உரிமையில்லை."

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**2.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளாலும் வெளிப்படுத்தப்படும் **இரு** அரசியல் தாபனங்களையும் முறையே பெயரிடுக.

(i) "இவ்வரசியல் தாபனம் ஆள்புலத்தில் வாழும் சகல பிரசைகளையும் உள்ளடக்கியதாகும்."

(ii) "இவ்வரசியல் தாபனம் ஆள்புலத்தில் வாழும் பிரசைகளுள் ஒரு பகுதியினரை மட்டும் உள்ளடக்கியதாகும்."

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**3.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளாலும் வெளிப்படுத்தப்படும் **இரு** சங்கங்களையும் பெயரிடுக.

(i) "அது ஓர் ஆள்புலத்தைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். அது ஒரு நிச்சயமான ஆள்புலத்தைக் கொண்டதாகும்."

(ii) "அது அனைத்துலகரீதியானதாகும். அது ஆள்புல எல்லைகளைக் கொண்டதன்று."

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**4.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள முதற் கூற்றின் மூலம் விபரிக்கப்படும் சமூக ஒழுங்கமைப்பையும் இரண்டாம் கூற்றின் மூலம் விபரிக்கப்படும் அரசியல் ஒழுங்கமைப்பையும் முறையே பெயரிடுக.

(i) "அது பொதுவான இனத்தையும், பொதுவான சமயத்தையும், பொதுவான வாழிடத்தையும், பொதுவான மொழியையும், பொதுவான வரலாற்றுப் பாரம்பரியத்தையும், பொதுவான நலன்களையும், பொதுவான அரசாங்கத்தையும், புவியியல் ஐக்கியத்தையும் கொண்டமைந்ததாகும்."

(ii) "அது ஆள்புலம், மக்கட் தொகை, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கு அத்தியாவசியக் கூறுகளைக் கொண்டதாகும். இந் நான்கு கூறுகளும் நிலவும்போது அதன் இருப்பு நிகழும்."

(1) ..........................................................................

(2) ..........................................................................

**5.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளின் மூலம் சுட்டப்படும் **இரு** அரசியல் தத்துவஞானிகளையும் குறிப்பிடுக.

(i) "அரசியல் சமூகக் கோட்பாட்டு வரலாற்றில் இடம்பெறும் முதல் இலட்சியவாத அரசியல் தத்துவஞானி."

(ii) "அரசியல் சமூகக் கோட்பாட்டு வரலாற்றில் இடம்பெறும் முதல் யதார்த்தவாத அரசியல் தத்துவஞானி."

(1) ..........................................................................

(2) ..........................................................................

**6.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளாலும் இடைத் தொடர்புடைய **இரு** விடயங்களின் விடயப் பரப்புகள் விளக்கப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு முறையே பெயரிடுக.

(i) "அது அரசியல் விஞ்ஞானத்தின் ஒரு விடயப் பரப்பாகும். அது அரசினால் ஆக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதனை மீறுதல் ஒரு குற்றமாக இருப்பதோடு தண்டனைக்கும் ஆளாக முடியும். அது அகிலரீதியானதும் சகலர் மீதும் பிரயோகிக்கப்படக் கூடியதுமாகும். அது துல்லியமானதும் நிச்சயமானதுமாகும். அது மனிதனின் வெளிவாரியான செயற்பாடுகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறது."

(ii) "அது அறவியலின் விடயப் பரப்பாகும். அது தனிப்பட்டோரின் மனச்சாட்சியால் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அது மனச்சாட்சியினால் தீர்மானிக்கவும்படுகிறது. அது மனிதரின் சிந்தனைகளையும் செயல்களையும் உள்ளடக்கிய முழு வாழ்க்கையையும் வெளிப்படுத்துகிறது. அது வாழ்க்கையின் உள்ளக, வெளியகச் செய்கைகளையும் வெளிப்படுத்துகிறது. அதனை மீறுதல் சட்டப்படி குற்றமன்று. அதனால் பௌதீகரீதியான தண்டனைக்குட்படுவதுமில்லை."

(1) ..........................................................................

(2) ..........................................................................

**7.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு பொருள் விளக்கங்களாலும் சுட்டப்படும் **இரு** அரசாங்க முறைகளையும் குறிப்பிடுக.

(i) "அது ஓர் ஆட்சி முறையெனப் பொருள் கூறப்படுவதோடு அம்முறைமையில் அரசின் சித்தமானது மக்களின் நேரடியான பங்கேற்பின் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது."

(ii) "அது ஓர் அரசாங்க முறையாக இருப்பதோடு சட்ட இறைமையாளர்களான வாக்காளர்கள் நேரடியாக அரசாங்கப் பொறிமுறையில் தலைமைத்துவத்தை வகித்துச் செயற்படுத்துவதற்குப் பதிலாக, தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி தம் சார்பாகச் செயற்படுத்துவதற்கான இயலளவைக் கொண்ட ஓர் ஆட்சித் தாபனம் அல்லது தாபனங்கள் தாபிக்கப்பட்டபோது உருவாகியது."

(1) ..........................................................................

(2) ..........................................................................

**8.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு வரைவிலக்கணங்களும் அரசாங்கத்தின் பணிகளை நடைமுறைப்படுத்தல், அரச அதிகாரத்தின் தன்மை என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்ட இரு அரசியல் கோட்பாடுகள் பற்றியனவாகும். அவ் **இரு** கோட்பாடுகளையும் இனங்கண்டு முறையே குறிப்பிடுக.

(i) "அரசாங்கத்தின் மூன்று பணிகளான சட்டவாக்கம், நிறைவேற்றம், நீதி என்பன வேறுபட்ட ஆட்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒவ்வொரு துறையும் அதற்கேயுரிய செயற்பாட்டுப் பரப்போடு வரையறுக்கப்பட வேண்டும் என்றும் அச்செயற்பாட்டுப் பரப்பு சுதந்திரமானதாகவும் உயர்தன்மை பொருந்தியதாகவும் இருக்க வேண்டும் என்றும் இக்கோட்பாடு சுட்டுகிறது."

(ii) "அது சட்டத்தால் தகைக்க முடியாத, பிரசைகள் மற்றும் குடிகள் மீது பிரயோகிக்கப்படும் அரசின் உயர் அதிகாரமாகும். அது தன்னிகரற்றதும் உயர்தன்மையானதும் தனிமுதன்மையானதும் பிரிக்க முடியாததும் ஒப்படைக்க முடியாததும் நிரந்தரமானதுமாகும். அது இறுதியான ஆணையதிகாரமாக இருப்பதோடு உள்ளகமானது, வெளியகமானது என இரு வகைப்படும்."

(1) ..........................................................................

(2) ..........................................................................

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**9.** கீழே தரப்பட்டுள்ளவை இரு வேறுபட்ட அரசாங்க முறைகளில் நிறைவேற்றுத்துறை - சட்டத்துறைத் தொடர்புகளின் இயல்புகளாகும். அவ் **இரு** அரசாங்கங்களையும் இனங்கண்டு முறையே பெயரிடுக.

(i) சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் வெவ்வேறாகத் தெரிவுசெய்யப்படுவதோடு அவற்றுக்கு யாப்பின் மூலம் சுதந்திரமான செயற் பரப்புகள் ஒப்படைக்கப்படும். அங்கு சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் ஆட்கள் உத்தியோகரீதியாகப் பிரிக்கப்படுவர். நிறைவேற்றுத்துறை யாப்புரீதியாக சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்படாததோடு, குற்றவிசாரணை என்ற தனித்துவமான ஒரு செயன்முறையினூடாகவன்றி சட்டத்துறையினால் நிறைவேற்றுத் துறையைப் பதவிநீக்கம் செய்ய முடியாது."

(ii) "அங்கு நாம நிறைவேற்றுப் பகுதி, உண்மை நிறைவேற்றுப் பகுதி என்ற இரு பகுதிகள் காணப்படுவதோடு உண்மை நிறைவேற்றுப் பகுதியானது சட்டத்துறையிலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவத்தின் பலத்தின் அடிப்படையில் சட்டத்துறையிலிருந்து தெரிவுசெய்யப்படும் ஆட்களைக் கொண்டிருக்கும். ஆகவே அங்கு வேறாகத் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்றுத்துறை இருக்கமாட்டாது. உண்மை நிறைவேற்றுத்துறை சட்டத்துறையிலிருந்து தெரிவுசெய்யப்படுவதால் அது சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டதாகும். இதன்படி நிறைவேற்றுத்துறை சட்டத்துறையின் நம்பிக்கையில் தங்கியிருப்பதோடு அந்நம்பிக்கையை இழப்பின் பதவியிலிருந்து அகற்றப்படலாம்."

(1) ..................................................

(2) ..................................................

**10.** கீழே குறிப்பிடப்பட்டவை நேரடி சனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் **இரு** வழிமுறைகளாகும். அவற்றை முறையே குறிப்பிடுக.

(i) "இது மசோதாக்கள் சட்டமாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் மக்களின் தீர்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் மக்கள் அபிப்பிராயத்தைக் கோரும் ஒரு வழிமுறையாகும். அதன்படி சட்டத்துறை நிறைவேற்றும் மசோதாக்கள் வாக்காளர்களுள் பெரும்பான்மையினரின் அங்கீகாரத்தைப் பெற்றாலேயே சட்டங்களாக ஆகும்."

(ii) "இது தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதிநிதி தனக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையை மீறினால் அப்பிரதிநிதியைப் பதவியகற்றுவதற்குப் பயன்படுத்தும் பிறிதொரு வழிமுறையாகும். இது தொடர்பாக முன்வைக்கப்படும் ஒரு விண்ணப்பத்தைத் தேர்தல் தொகுதியிலுள்ள வாக்காளர்களுள் பெரும்பான்மையினர் அங்கீகரிப்பின் அப்பிரதிநிதியைப் பதவியிலிருந்து அகற்ற முடியும்."

(1) ..................................................

(2) ..................................................

**11.** (i) எந்த யாப்புச் சீர்திருத்தத்தினால் இலங்கை ஓர் ஐக்கிய அரசாக ஆக்கப்பட்டது ?

(ii) எந்த அரசியல் யாப்பினால் முதன்முதலாக இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது ?

(1) ..................................................

(2) ..................................................

**12.** (i) பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சியாளர்களால் சுதந்திரத்துக்கு முன்னைய இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட இறுதி யாப்புச் சீர்திருத்தம் யாது ?

(ii) அந்த யாப்புச் சீர்திருத்தத்தினால் இலங்கையில் தாபிக்கப்பட்ட அரசாங்க முறைமை யாது ?

(1) ..................................................

(2) ..................................................

**13.** (i) சோல்பரி யாப்பின் கீழ் செனற் மன்றுக்கு ஒதுக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்ட குறைந்தபட்ச அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கை யாது ?

(ii) சோல்பரி யாப்பினால் செனற் மன்றுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட கட்டாய அமைச்சுப் பதவி யாது ?

(1) ..................................................

(2) ..................................................

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**14.** நாம நிறைவேற்றாளர் பதவி நிலவிய, சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் **இரு** அரசியல் யாப்புகளையும் பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**15.** (i) அரசியல் யாப்பு விவகாரங்கள் தொடர்பாகச் செயற்படுவதற்கு நீதி முன் புனராய்வு அதிகாரத்துடன் கூடிய புறம்பான நீதிமன்றினைத் தாபித்த அரசியல் யாப்பைப் பெயரிடுக.

(ii) நீதி முன் புனராய்வு அதிகாரத்தை உயர் நீதிமன்றுக்கு ஒப்படைத்த அரசியல் யாப்பைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**16.** 19ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ்,

(i) சனாதிபதியின் பதவிக்காலம்

(ii) ஓர் ஆள் அப்பதவியை வகிக்கக்கூடிய தவணைகளின் எண்ணிக்கை என்பவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் யாவை ?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**17.** (i) 19 ஆம் திருத்தச் சட்டத்தின்படி பாராளுமன்றத்தின் பதவிக்காலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் யாது ?

(ii) 19ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றினைக் கலைத்தல் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள வரையறை யாது ?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**18.** (i) 1978 யாப்பின் மூலம் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக நீதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றம் யாது ?

(ii) 1978 யாப்பின் கீழ் எழுத்தாணைகளைப் (writ orders) பிறப்பிப்பதற்கு நீதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றம் யாது ?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**19.** (i) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு எத்தனை பிரதான நிறுவனங்களைக் கொண்டமைந்துள்ளது ?

(ii) மனித உரிமைகள் தொடர்பான சகல விடயங்களையும் கையாளும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நிறுவனத்தைப் பெயரிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**20.** (i) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தில் (SAARC) உறுப்புரிமை பெற்ற இறுதி அரசின் பெயரைக் குறிப்பிடுக.

(ii) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தின் தீர்மானம் எடுக்கும் உயர் அமைப்பினைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

* *

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

19732

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

දේශපාලන විද්‍යාව II
**அரசியல் விஞ்ஞானம் II**
Political Science II

23 T II

**அறிவுறுத்தல்கள்:**

※ **B** மற்றும் **C** பகுதிகளிலிருந்து **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி B

**1.** "அரசியல் விஞ்ஞானமானது ஓர் இயற்கை விஞ்ஞானம் என்பதனை விட ஒரு சமூக விஞ்ஞானமாகவே கருதப்படுகிறது." நீர் உடன்படுகிறீரா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (20 புள்ளிகள்)

**2.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிக் கருத்துரைக்குக.

(i) ஒரு ஜனநாயக அரசியல் முறைமையில் அரசியல் யாப்பின் வகிபாகம்

(ii) தற்கால அரசாங்கங்களில் நிறைவேற்றுத்துறையின் வகிபாகம்

(iii) தற்கால அரசியல் முறைமைகளில் சட்டத்துறையின் வகிபாகம்

(iv) ஒரு ஜனநாயக அரசியல் முறைமையில் நீதித்துறையின் வகிபாகம் (10 × 2 = 20 புள்ளிகள்)

**3.** ஜனநாயக ஆட்சியில் பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வகிபாகத்தைப் பரிசீலிக்குக.

(i) சிவில் சமூகம்

(ii) நல்லாட்சி

(iii) வெகுசன ஊடகம்

(iv) அரசியல் கட்சிகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

**4.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி ஆராய்க.

(i) ஐக்கிய அமெரிக்க அரசாங்க முறையில் நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான தடைகள்

(ii) **ஒன்றில்** இந்தியாவில் **அல்லது** பிரித்தானியாவில் அரசியல் நிறைவேற்றுப் பகுதியின் நியமனம் மற்றும் பதவிநீக்கம் தொடர்பான செயன்முறை

(iii) பொதுக் கொள்கைகளின் இயல்பு **அல்லது** சர்வதேச அரசியலில் அரசுகளின் தேசிய நலன்கள் (10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி C

**5.** "இலங்கையானது நிலமானிய முறைமையிலிருந்து முதலாளித்துவத்துக்கு மாறுவதற்கான அடித்தளத்தை இட்டது கோல்புருக் - கமரன் சீர்திருத்தங்கள் ஆகும்." நீர் உடன்படுகிறீரா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (20 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விபரிக்குக.

(i) 1931 டொனமூர் சீர்திருத்தங்களின் சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகள்

(ii) பகிரங்க சேவையினது அல்லது நீதித்துறைச் சேவையினது சுதந்திரத்தைப் பேணுவதற்கு சோல்பரி யாப்பில் வழங்கப்பட்டிருந்த யாப்புசார் காப்பீடுகள்

(iii) நீதித்துறையை அல்லது பகிரங்க சேவையைக் கட்டுப்படுத்துவதற்கு 1972 யாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த யாப்புசார் ஏற்பாடுகள்

(iv) ஜனாதிபதியின் நிலை, அதிகாரங்கள், பணிகள் தொடர்பாக 19 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் (10 × 2 = 20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விடரிக்குக.

(i) ஆட்சியில் அரசியலமைப்புப் பேரவையின் வகிபாகம்

(ii) மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 1978 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறை

(iii) பகிரங்க சேவையில் நிலவும் இலஞ்சம் மற்றும் ஊழல்களைத் தடுப்பதற்குத் தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள்

(iv) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்கு 1978 யாப்பில் வழங்கப்பட்டுள்ள காப்பீடுகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிக் கருத்துரைக்குக.

(i) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயலாளர் நாயகத்தின் வகிபாகம்

(ii) சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மேம்படுத்துவதில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் வகிபாகம்

(iii) மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் வகிபாகம்

(iv) தற்போதைய தேசிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைப் பண்புகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk